**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

பி.வா.சா.1 – பொன்னுசாமி OS.No. 23/2021 நாள் : 15.07.2025

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

சுப்ரமணியனுக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவியின் பெயர் மங்கையர்கரசி, 2 வது மனைவியின் பெயர் வளர்மதி என்றால் சரிதான். வளர்மதிதான் எனது மாமியார் ஆவார். முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதுதான் சுப்ரமணியன் 2 வதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். மங்கையர்கரசி 2013 ல் இறந்தார் என்றால் சரிதான். முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது சுப்ரமணியன் 2 வது திருமணம் செய்ததால் 2 வது மனைவிக்கு சட்டப்படியான மனைவி அந்தஸ்து வராது என்று சொன்னால் சரியல்ல, மங்கையர்கரசியின் விருப்பத்துடன் 2 வது திருமணம் செய்துள்ளார். மங்கையர்கரசியின் விருப்பத்துடன் 2 வது திருமணம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மங்கையர்கரசியின் விருப்பத்துடன் சுப்ரமணியன் 2 வது திருமணம் செய்துள்ளார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மேகநாதன், சித்ரா ஆகியோர்கள் சுப்ரமணியனுக்கும் அவரது முதல் மனைவி மங்கையர்கரசிக்கும் பிறந்தவர்கள் என்றால் சரிதான். சுப்ரமணியனுக்கும் வளர்மதிக்கும் 3 பெண் குழந்தைகள் பிறந்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த முதல் Item சர்வே எண்.45/11C என்றால் சரிதான். அதில் மொத்தம் 8 செண்ட் உள்ளதில் சுப்ரமணியனும் அவரது சகோதரர்களும் தலா 2 செண்ட்டை பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்துக்கொண்டதில் மேல்புறம் 2 செண்ட் நிலம் இராஜாங்கத்திற்கு உரியதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் அவர்கள் சடையன்

வகையறாவிடம் இருந்து 4 சகோதரர்களும் சேர்ந்து கூட்டாக கிரையம் பெற்றார்கள், அதற்கு கிரையபத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த சர்வே எண்.45/11C ல் உள்ள 8 செண்ட் இடமானது பூர்வீக சொத்து என்றும் நான் சொல்வதுபோல் சகோதரர்கள் 4 பேரும் கூட்டாக கிரையம் பெற்ற சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்ரமணியன் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தில் வாங்கியது என்று சொன்னால் அது சரியல்ல, அது அவர் தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார், அந்த வருமானத்தில் இருந்து வாங்கினார். சுப்ரமணியன் பெயரில் கிரையம் பெற்ற போது தலைமை ஆசிரியராக சுப்ரமணியன் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்றும், குடும்பத்திற்கு செலவு போக எவ்வளவு சேமித்தார் என்பது குறித்து எனது சாட்சியம் அல்லது எழுத்து மூலமான வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. பூர்வீக சொத்தை சுப்ரமணியன், இராஜாங்கம், சாமிதுரை, நாகமுத்து ஆகியோர்கள் தங்களுக்குள் தலா 4 ஏக்கராக பிரித்துக்கொண்டார்களா என்றால் சரிதான். அந்த 4 ஏககரில் 2 ஏக்கர பயிர் இடும் கொல்லை, 1.5 முந்தரி கொல்லையும் மீதி 0.5 ஏக்கரில் புளியமரம் இருந்ததாக எனது மாமனார் சொன்னதால் எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் பூர்வீகத்தில் இருந்து வந்த 4 ஏக்கரில் கட்டுப்பட்டதா என்றால் மேற்கண்ட 4 ஏக்கரில் பூர்வீகத்திற்கு கட்டுப்பட்டதும் உண்டு கட்டுப்படாததும் உண்டு. அந்த 4 ஏக்கர் சொத்துக்களை வெளியாட்களுக்கு சுப்ரமணியன் கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, தனது மகனுக்கு தான செட்டில்மெண்ட் செய்துள்ளார். பூர்வீக சொத்தை தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்தால் செல்லுமா என்றால் சுப்ரமணியனின் தகப்பன்

சுப்ரமணியனுக்கு கொடுத்து அதை அவர் தனது மகனுக்கு கொடுத்ததால் செல்லும். அந்த செட்டில்மெண்ட் 29.03.2012 ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். இந்த செட்டில்மெண்ட்டை முதல் மனைவி மூலம் பிறந்த சித்ராவும் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை சுப்ரமணியன் மட்டும்தான் எழுதிக்கொடுத்தார். பூர்வீக சொத்தை மற்றொரு பாகஸ்தர் இருக்கும்போது அவர்கள் கையெழுத்து இல்லாமல் 29.03.2012 ம் தேதியன்று சுப்ரமணியன் தனது மகனுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் செல்லாது என்று சொன்னால் அது முதல் மனைவி மங்கையர்கரசி பெயரில் சுப்ரமணியன் சொத்து வாங்கிவைத்துள்ளார் அந்த சொத்துக்களை அவர் சித்ராவிற்கு கொடுப்பதாக அவர் வாய்மொழியாக கூறியுள்ளார். அதனால் இந்த தான செட்டில்மெண்ட் செல்லும் என்று சொல்கிறீர்களா என்றால் ஆமாம்.15.06.2018 ல் தாவா 2 முதல் 4 ita பூர்வீக சொத்தை 2 வது மனைவி வளர்மதி பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். இந்த தான செட்டில்மெண்ட்டை சித்ராவும், மேகநாதனும் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, அவர் சொத்தை அவர் எழுதிக் கொடுத்துள்ளார். ஆகையால் இந்த 15.06.2018 ல் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 5 வது ஐட்ட பூரிவீக சொத்தை சுப்ரமணியன் 29.03.2018 ல் 5 வது பிரதிவாதியான எனது மனைவி சத்திய பாமாவிற்கு தான செட்டில்மெண்ட் பத்திரமாக சுப்ரமணியன் எழுதிக்கொடுத்தாரா என்றால் 2018 ம் வருடம் எழுதிக் கொடுக்கவில்லை 2012 ல்தான் எழுதிக்கொடுத்தார். இந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல,

தகப்பன் மகளுக்கு எழுதிக்கொடுத்தது செல்லும். இந்த 1 முதல் 7 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து வாதிகளின் பாக உரிமையை கெடுப்பதற்காக 18.02.2021 அன்று மோசடியாக ஒரு கிரைய பத்திரம் தயாரித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த 1 வது ஐட்டமும் பூர்வீகத்தில் இருந்து வந்த வருமானத்தில்தான் வாங்கியது என்றால், அது அவரது சொந்த வருமானத்தில்தான் சடையன் வகையறாவிடம் இருந்து வாங்கினார். இந்த பூர்வீக சொத்துக்களான முந்தரி கொல்லை பராமரித்தல் மற்றும் பயிரிடுதல் ஆகிய அனைத்தையும் சுப்ரமணின்தான் பார்த்துக்கொண்டாரா என்றால் ஆமாம். பூர்வீக சொத்தில் இருந்து வருடத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது மாமனாரை கேட்டால்தான் தெரியும் என்றால் சரிதான். நான் 6 வது ஐட்ட சொத்தை 15.03.2013 ல் மேகநாதனிடம் இருந்து வாங்கியுள்ளேன் என்றால் சரிதான், அது எனது மாமனார் மேகநாதனிடம் சொல்லி அதன் அடிப்படையில்தான் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை,மேகநாதனுக்கு பணத்தேவை இருந்ததால் என்னிடம் அந்த சொத்தை வாங்கிகொள்ளுமாறு கேட்டார் அதனால் அவர் விருப்பப்படிதான் எனக்கு எழுதிக்கொடுத்தார். அந்த சொத்தை நான் ரூ.10,85,000/- கனரா வங்கி லோன் மூலம் அந்த பணத்தை நான் மேகநாதன் ஸ்டேட் பேங்க் அக்கவுண்ட்டுக்கு அனுப்பி கிரையம் பெற்றுக்கொண்டேன். ஸ்டேட் பேங்கில் லோன் போட்டதற்கான ஆதாரங்களை கோர்டில் சமர்பித்துள்ளேன். செண்ட் எவ்வளவு என்று பேசினோமா என்றால் மொத்த தொகையாகதான் பேசினோம். நான் சொல்லுவது போல் அந்த சொத்துக்கு 15.03.2013 அன்று ஏற்பட்ட கிரையத்திற்கு எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும் ,எனது

மாமனார் சொன்னதனால் மேகநாதன் பெயரளவிலான மேற்படி கிரைய பத்திரத்தை எனது பெயருக்கு எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. மங்கையர்கரசி உடல்நிலை சரியில்லாமல் 6 மாதம் முதல் 1 வருடம் வரை வயது முதிரிவினால் படுக்கையில் இருந்தார். 20.10.2014 அன்று தாவா 7 வது ஐட்ட சொத்தை பொறுத்து மேகநாதன் ஜெயலட்சுமிவுடன் கிரைய ஒப்பந்தம் செய்தாரா என்றால் செய்தார். மங்கையர்கரசியின் வைத்திய செலவுக்காகதான் மேற்படி ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. மங்கையர்கரசியை சுப்ரமணியன்தான் பார்த்துக்கொண்டிருந்தார். மேற்படி கிரைய ஒப்பந்தம் தொடர்ப ாக வழக்கு ஏதேனும் போடப்பட்டதா என்றால் போடப்பட்டது. அதில் தீர்ப்பளிக்கப்பட்டது, அந்த தீர்ப்பின் நகலை இந்த கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரைய ஒப்பந்தம் மங்கையர்கரசியின் வைத்திய செலவுக்காக நம்பிக்கைக்காக ஏற்பட்ட ஒப்பந்தம் என்றும், உண்மையான கிரைய ஒப்பந்தம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 20.102014 அன்று தாவா 8 வது ஐட்ட சொத்தை மேகநாதன் இளவரசன் என்பவருக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். 9,10 வது ஐட்ட சொத்தை இராஜகோபால் அவர்களுக்கு மேகநாதன் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராஜகோபாலுக்கு விற்ற சொத்தை மேகநாதனின் மனைவி மலர்விழியே மீண்டும் கிரையம் பெற்றுக்கொண்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தொடரும்போது கிரைய பத்திரத்தின் நகலை வாங்கி பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. மங்கையர்கரசியும் மேகநாதனும் ஒரு வீட்டிலும், 2 வது மனைவியும் எனது மாமனார் சுப்ரமணியனும் ஒரு வீட்டிலும் வாழ்கிறார்களா என்றால் சுப்ரமணியன் தனது மனைவி

மங்கையர்கரசியுடன்தான் வாழ்ந்தார், மகனுக்கு தனியே வீடு கட்டிக்கொடுத்து அவர் அவரது மனைவி மற்றும் குழந்தைகளுடன் தனியே இருந்தார்கள். சுப்ரமணியன் தனது 2 வது தார குழந்தைகளுக்கு தலா 20 பவுன் போட்டு திருமணம் செய்து வைத்தாரா என்றால் அவர்அவர்களுக்கு செய்ய வேண்டியதை செய்துள்ளார். மேகநாதன் தற்போது ஆசிரியராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். நிலக்கரி சுரங்கத்திற்காக 11,12,13 ஐட்ட சொத்துக்களை அரசாங்கம் எடுத்து மீண்டும் சுப்ரமணியனிடமே அரசாங்கம் கொடுத்துவிட்டது என்றால் ஆமாம். 11,12,13 ஐட்ட சொத்துக்கள் சுப்ரமணியனுக்கு பூர்வீக சொத்தா அல்லது அவர் வாங்கிய சொத்தா என்றால் தெரியவில்லை. அவர் வாங்கியது என்றால் கிரைய பத்திரம் இருக்கும் என்றும் வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை, சுப்ரமணியன் கிரையம் பெற்றதா என்று கிரைய பத்திர நகலை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. 19.07.2023 ம் தேதி 11,12,13 சொத்துக்களை பொறுத்து சுப்ரமணியன் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் பிரதிவாதி வளர்மதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் வழக்கு Exparte ஆகும்போது எழுதிக்கொடுத்துள்ளார். இந்த தான செட்டில்மெண்ட் பூர்வீக சொத்தை பொறுத்தவரை சட்டப்படி செல்லாது என்றால் அது சரியல்ல, கணவனின் சொத்தை மனைவிக்கு கொடுத்தது செல்லும். சுப்ரமணியன் கடந்த 3 வருடங்களாக படுத்த படுக்கையில் உள்ளார். நாங்கள் அனைவரும் ஒன்றுகூடி சுப்ரமணியன் உடல்நிலை சரியல்லாமல் இருப்பதை பயன்படுத்திக்கொண்டு மோசடியாக 19.07.2023 ல் தான செடட்டில்மெண்ட்டடை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. வாதிகள் Exparte ஆனதை ரத்து செய்வதற்கு உடனே மனு போடப்பட்டதா

என்றால் உடனடியாக போடவில்லை சில மாதங்கள் ஆனது. வழக்கு நிலுவையில் உள்ளபோது 10.07.2023 ல் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் சொத்துக்களை பொறுத்து வளர்மதி தனது 3 குழந்தைகள் பெயரில் தனித்தனியே தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். தேதி எனக்கு நியாபகம் இல்லை. இந்த தான செட்டில்மெண்ட் அனைத்தும் செல்லாது என்றால் சரியல்ல. அம்மா தனது 3 மகள்களுக்கு எழுதிக்கொடுத்தது செல்லும். வழக்கு நிலுவையில் இருக்கும்போதே தொடர்ந்து வாதியின் பாக உரிமையை கெடுப்பதற்கு மோசடியாக பத்திரங்களை ஏற்படுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆகவே தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கு பாக உரிமை கிடைக்க வேண்டும் என்றும், எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.